மணப்பாறை சட்டமன்றத் தொகுதி : கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை

# கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆணைகளை வழங்கினார்!

**திருச்சி, பிப்.8-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழாவில் மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆணைகளை வழங்கினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.2.2026) திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழாவில் மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எம்.எம்.348 கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கையின்படி கூட்டுறவு நிறுவனங்களில் 31.1.2021 அன்று நிலுவையில் இருந்த விவசாயிகளின் பயிர்கடன்களும் சுயஉதவிக்குழு கடன்களும், பொது நகைக்கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டது.

அதனடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 66,180 விவசாயிகளின் 516.76 கோடி ரூபாய்க்கான பயிர்கடன்களும் 4,129 மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 41,781 மகளிரின் 79.60 கோடி ரூபாய்க்கான மகளிர் சுயஉதவிக்குழு கடன்களும், 53,271 பயனாளிகளுக்கு 176.97 கோடி ரூபாய்க்கான பொது நகைக்கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எம்.எம்.348 கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நிர்வாக காரணங்களால் 31.1.2021 அன்று நிலுவையில் இருந்த விவசாயிகள் பெற்ற பயிர்கடன்கள் தள்ளுபடி செய்யப்படாததால் விவசாயிகள் புதிதாக பயிர்க்கடன் பெற இயலாமல் இருந்து வந்தனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களிடம் இப்பகுதியில் உள்ள விவசாயிகள் கோரிக்கை மனு அளித்ததன் அடிப்படையில் சிறப்பு அனுமதி பெற்று தற்போது இச்சங்கத்தில் உள்ள 2,116 விவசாயிகளின் 13.57 கோடி ரூபாய்க்கான பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 44 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 541 பெண்கள் பெற்ற 86.48 இலட்சம் ரூபாய்க்கான மகளிர் சுயஉதவிக்குழு கடன்களும், 938 நபர்களுக்கு 3.31 கோடி ரூபாய்க்கான பொது நகைக்கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்கள் மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எம்.எம்.348 கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆணைகளை வழங்கினார்.

மேலும் எம்.எம்.348 கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் 3 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு தலா 10.00 லட்சம் ரூபாய்க்கான கடன் இணைப்புகளையும், 2 விவசாயிகளுக்கு மொத்தம் 1,87,000 ரூபாய்க்கான விவசாய பயிர்கடன் காசோலைகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.செளந்தரபாண்டியன், செ.ஸ்டாலின்குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, எஸ்.இனிகோ இருதயராஜ், ப.அப்துல் சமது, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு ஒலிம்பிக் பதக்க இலக்கு திட்ட தலைவர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், துணை மேயர் திருமதி ஜி.திவ்யா, சைக்கிளிங் விளையாட்டு வீரர் பிரதீப் சங்கரா, பாரா அத்லடிக் வீரர் மணிகண்டன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர், சிவகங்கை மாவட்டம், கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட குன்றக்குடி, தருமைக் கயிலைக் குருமணி மேல்நிலைப்பள்ளியில் நேற்று (7.2.2026) தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற ”நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் ஆகியவைகளை தொடங்கி வைத்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு வகையான உதவி உபகரணங்களை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தவத்திரு பொன்னம்பல அடிகளார், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, முதல்வர் (பொ) சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மரு.ஜடாமுனி, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.ஜெயகீதா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.மீனாட்சி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பாலகிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 353 வது நாள்!

## திரு.வி.க. நகர் தெற்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, பிப்.8-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 353ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (07.02.2026), திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 76, செல்லப்பா தெரு, ஸ்டாரன்ஸ் ரோடு, 2) வட்டம் 73, ஸ்டாரன்ஸ் ரோடு, 4 ஆவது தெரு, (தேவி டீ ஸ்டால் அருகில்) தாசமகான், ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.*



சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன், மீனவரணி பகுதி அமைப்பாளர் தே.ரஞ்சித்குமார்,

வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.சதீஷ்குமார். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S. முரளி, பெரம்பூர். R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.


